**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை :- திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

**இ.ம.எண்.3/2025 இன் அ.வ.எண்.169/2021**

1. பாரதி
2. ஜெயசரஸ்வதி
3. அருள்ராஜ்
4. அருள்நேரு

. . . மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

**/எதிர்/**

1. வெள்ளையம்மாள்
2. லோகேஸ்வரி
3. பிரியா
4. போதும்பொண்ணு
5. வேல்முருகன்

. . . எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள் தரப்பில் கட்டளை 7 விதி 11 (a), (d) சி.பி.சி.-ன்படி, எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்த பிராதினை நீக்கறவு செய்யகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 19.11.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 11.02.2026 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 24.02.2026 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.T.பெரியசாமி – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரர்களுக்காக | : | திரு.MS.இம்ரான் கான் – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் ஏனைய மனுதார்களுக்காகவும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் / வாதிகள் கடந்த 15.05.2006-ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி

15.05.2006-ம் தேதியிட்ட ஆவணமானது பதிவு சட்டப்பிரிவு 17 மற்றும் 49-யின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்பதால் மேற்படி ஆவணத்திற்கு எவ்வித சட்ட வலுவும் இல்லை. கடந்த 15.05.2006-ம் தேதியிட்ட ஆவணத்தின் வாயிலாக எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு எவ்வித உரிமையும் எழாது. மேற்படி 15.05.2006-ம் தேதியிட்ட ஆவணமானது மோசடியான ஒன்றாகும். மேற்படி 15.05.2006-ம் தேதியிட்ட ஆவணத்தினை எதிர்மனுதாரர்கள் / வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு தாக்கல் செய்யாத ஆவணத்தினை நீதிமன்றம் கண்ணுற இயலாது. எனவே, எதிர்மனுதாரர்கள் / வாதிகள் உரிய வழக்குமூலத்தை தெரிவித்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதாலும், எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்த பிராதினை நீக்கறவு செய்யகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) முதல் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, ஏனைய எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்களை மனுதாரர்களே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர்கள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்று மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை முடிவுற்று, குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கத்திற்காகவும், எதிர்மனுதாரர்களை மனஉளைச்சலுக்கு ஆளாக்கவேண்டும் என்பதற்காகவும் பொய்யான சங்கதிகளை தெரிவித்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால், மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4) மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர்கள் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5) எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், மனுதாரர்கள் அவரது மனுவினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால் மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

6) **தீர்வு :-**

**6 (1)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மீது எதிர்மனுதாரர்கள் / வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி கடந்த 11.11.2014-ம் தேதி அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட TrOP.No.24/2020 உத்தரவின் படி அ.வ.எண்.40/2021 (மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்) மற்றும் அ.வ.எண்.184/2014 (மாவட்ட உரிமையில் நீதிமன்றம் குளித்தலை) வழக்கினையும் இணைந்து நடத்த கடந்த 27.01.2021-ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட, அதனடிப்படையில் மூன்று வழக்குகளும் இந்நீதிமன்றத்தால் சேர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது. மேலும் அ.வ.எண்.170/2021 வழக்கானது பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காகவும், அ.வ.எண்.22/2013 வழக்கானது பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காகவும், இவ்வழக்கானது பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்காகவும் நிலுவையில் இருந்து வருகிறது.

**6 (2)** இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 11.02.2021–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்று, மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பி.வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக நிலுவையில் இருந்த நிலையில், அசல் வழக்கின் பிராதினை நீக்கறவு செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6 (3) உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு கட்டளை VII விதி** ***11. Rejection of plaint.— The plaint shall be rejected in the following cases:—***

***(a) where it does not disclose a cause of action;***

***(d) where the suit appears from the statement in the plaint to be barred by any law;***

என கூறப்பட்டுள்ளது.

**6 (4)** எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள பிராதில், ***"Cause of action for the Suit arose on 31.1.2013 when the defendants and their men attempted to interfere with the Plaintiffs' peaceful possession and enjoyment of the suit properties which was resisted by the Plaintiffs with great difficulty and everyday thereafter the threat continues and at Vayalur Village and Pappalckapatty villages, Krishnarayapuram Taluk, Karur District where the suit properties situate within the Jurisdiction of this Honourable Court"*** என கூறப்பட்டுள்ளது.

**6 (5)** பிராதினை நீக்கறவு செய்ய கோரிய மனுவானது ஏன் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்கின்ற சங்கதிக்கு விளக்கம் எதனையும் மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை.

**6 (6)** வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மூலமானது உண்மையான ஒன்றா? அல்லது பொய்யான ஒன்றா? என்பதை வழக்கு விசாரணையின் போது தான் தீர்மானிக்க இயலும். தரப்பினர்களால் எழுப்பப்பட்டுள்ள இதர சங்கதிகளை பொறுத்து இம்மனுவில் இத்தருணத்தில் விரிவாக விவாதிக்க இயலாது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 15.05.2006–ம் தேதியிட்ட ஆவணமானது பதிவு செய்யப்பட்ட ஆவணமா? இல்லையா? என்பதும் குறித்தும், மேற்படி ஆவணத்தின்

சான்றியல் மதிப்பு குறித்தும் இத்தருணத்தில் விவாதிக்க இயலாது. மனுதாரர் தரப்பில் 15.5.2006–ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத ஆவணத்தை வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்யவில்லை என்கின்ற சங்கதியை பொறுத்து மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்வதும், குறியீடு செய்வதும், எதிர்மனுதாரர்களின் விருப்ப தேர்விற்கு உட்பட்டதாகும்.

6 (7) மனுதாரர்கள் இம்மனுவில் கூறியுள்ள சங்கதியான வழக்கு மூலம் இல்லை என்கின்ற சங்கதி மற்றும் அசல் வழக்கானது சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்கின்ற சங்கதி ஆகியவை சட்டம் மற்றும் பொருண்மை சார்ந்த (Mixed question of facts and laws) சங்கதி என்பதால் மேற்படி சங்கதிகளை பொறுத்து சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், நம்பத்தகுந்தவையாகவும் இல்லை. எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

7) **முடிவாக,**

**(அ)** இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**(ஆ)** செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.24 17:55:38 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.24 17:55:44 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.